# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ

16 Languages

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 OCTOBER No. 10


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### யோவான் 1:1-10

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.
3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.
5. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.
6. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான்.
7. அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்கச் சாட்சியாக வந்தான்.
8. அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான்.
9. உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.
10. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை.

## நீங்கள் பிரகாசிக்க அழைக்கப்பட்டவர்கள்!

YOU ARE CALLED TO SHINE!


சகோதரி ஏஞ்சலின்




நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில், என் அன்பான **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

இந்தியாவில், தீபாவளி மாதம் மிகவும் சிறப்பான காலமாகும். நாடு முழுவதிலும், உலகின் பல பகுதிகளிலும் இலட்சக்கணக்கான மக்கள் 'ஒளிகளின் திருவிழா' என்று அழைக்கப்படும் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். இது பாரம்பரியமாக இருளின்மேல் ஒளி வெற்றி பெறுவதைக் குறிக்கும் விழாவாகக் கருதப்படுகிறது.

உலகெங்கிலும் இந்தியர்கள் தீபாவளியைக் கொண்டாடுவதைக் காணும்போதெல்லாம், அதைவிட மகத்தான ஒரு ஒளியை என்னால் நினைக்காமல் இருக்க முடியாது; அதுவே உலகத்தின் ஒளியாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து!

நம்மைச் சூழ்ந்திருந்த இருளுக்குள் அவர் இறங்கி வந்து, நம் கண்களைத் திறந்து, நம்பிக்கையற்றோரின் உள்ளத்தில் நம்பிக்கையை எழுப்பி, நம்மை இருளின் அதிகாரத்திலிருந்து தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நடத்தினார்.

### கிறிஸ்துவின் ஒளி இருளுக்குள் பிரவேசிக்கும்போது!

தேவன் சிருஷ்டிப்பில் உரைத்த முதல் வார்த்தைகளில் ஒன்று:

... **வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்,...** ஆதியாகமம் 1:3.

ஆதியாகமம் 1:1–4, உருவமற்றதும் வெறுமையுமான, இருளால் சூழப்பட்ட ஒரு உலகத்தை நமக்கு காண்பிக்கின்றது. ஆனால், அந்த இருள் கதையின் முடிவல்ல, தேவன் உரைத்தபோது, இருளுக்குள் ஒளி பிரவேசித்தது.


தொடர்ச்சி 3-ம் பக்கம்.....



அழைப்பின் எதிரொலி! கிறிஸ்தவ யூடியூப் சானல்!



யோதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

ஆங்கிலம், இந்தி மொழிகளில் – அதிகாலை 1.00 மணி முதல்

தமிழ், தெலுங்கு மொழிகளில் – அதிகாலை 2.00 மணி முதல்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு – காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

*... இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் நாமம் யேகோவா என்று அறிந்து கொள்வார்கள். – எரேமியா 16:21.*



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**EX MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Sis. Sajini Cherian
Rev. Dr. J. John Rajarathnam, B.E.S., B.D., M.Th.
Rev. Dr. K.R. Rajasekaran
Adv. N. Balaji, B.Com., M.L.



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293
Cell : (+91) 98410 71852, 98412 71858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

தேவனால் அழைக்கப்பட்டு, உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் நம் அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளை நினைவு கூர்ந்து, அவர்களுக்கு நம் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிப்பது எத்தனை மகிழ்ச்சியான தருணம்!

நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் உலகின் பல்வேறு பகுதிகளில் தொலைவில் இருந்தாலும், மொழி, கலாச்சாரம், சூழ்நிலை ஆகியவற்றில் வேறுபட்டிருந்தாலும், கர்த்தருக்குள் ஒன்றிணைந்து வாழும் இந்த மகத்தான பாக்கியத்திற்காக நாங்கள் தேவனுக்கு மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

### ஒரு அற்புதமான ஆரம்பம்!

ஆம், 1969–ஆம் ஆண்டு ஆகஸ்டு 10–ஆம் தேதி, நெய்யூர் சி.எஸ்.ஐ. (C.S.I.) திருச்சபைக்கு உட்பட்ட நெல்லறைக்கோணம் என்ற சிறிய கிராமத்தில் **நற்செய்தி ஜெபக்குழு (Good News Prayer Band)** என்ற பெயரில் **அழைப்பின் எதிரொலி** தொடங்கப்பட்டபோது, அது ஒரு எளிமையான துவக்கமாகவே அமைந்தது. கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை அறியாமல், நித்திய அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த எண்ணற்ற ஆண்களையும், பெண்களையும் குறித்த பாரத்தையும், தரிசனத்தையும் பெற்றிருந்த ஒரு சில இளம் ஆண்கள், பெண்களைக் கொண்டே இது ஆரம்பிக்கப்பட்டது.



இது நான் இளைஞனாக இருந்தபோது நடந்தது. கல்வாரியில் நமக்காகத் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி, தமது ஜீவனையே அர்ப்பணித்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அழைப்புக்கு கீழ்ப்படிந்து, தங்களை முழுமையாக அர்ப்பணித்த அந்த இளைஞர்களின் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் தேவன் உண்மையாகவே கனப்படுத்தியிருக்கிறார்.

ஆண்டுகள் கடந்தபோது, அந்த எளிமையான தொடக்கம் **அழைப்பின் எதிரொலி** என்ற மகத்தான ஊழியமாக மலர்ந்து வளர்ந்தது; இந்தப் பெயரையும், இந்த தரிசனத்தையும் தேவனே நமக்குக் கொடுத்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். இன்று, இந்தியாவைக் கடந்தும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, ஸ்காட்லாந்து, லண்டன் மற்றும் இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்த ஊழியம் பரவியிருக்கிறது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மகத்துவமானவர் அல்லவா!

அவர் நமது எல்லைகளை விரிவுபடுத்தியது மட்டுமல்லாமல், பல்வேறு ஊழியங்களின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நம்மை ஆசீர்வாதத்தின் கருவியாகவும் பயன்படுத்தி வருகிறார்.

*இன்று நம்முடைய ஊழியத்தின் பல்வேறு பகுதிகளாக:*

- **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும்,
- **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** – 3 மொழிகளிலும்,
- **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** – கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளியும்,
- இறையியல் அஞ்சல்வழிக் கல்வி – 2 மொழிகளிலும்,
- BIBLECOR அடிப்படை வேதாகமப் பாடங்கள் – 3 மொழிகளிலும்,
- பன்மொழி மிஷன் திருச்சபைகளும்,
- நற்செய்தி அச்சகமும்,
- ஊழியப் பயிற்சித் திட்டங்களும்,
- ஊடக ஊழியங்களும் (YouTube),
- சமூக மேம்பாட்டுப் பணிகளும்,


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▫ BIBLECOR - Postal Courses (3 languages) ▫ YouTube Ministry ▫ Online Courses ▫ Theological Correspondence Courses (2 languages) ▫ Church Planting ▫ Nehemiah Bible Colleges ▫ Gospel Printing Press ▫ Great Commission Partners ▫ St. Paul's Matriculation School ▫ Crusades ▫ Community Development

- மேலும் தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக பல்வேறு ஊழியங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## குற்றுயிராக விடப்பட்ட மனுஷன்!



லூக்கா 10–ஆம் அதிகாரத்தில், எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்று கொண்டிருந்த ஒருவனைப் பற்றி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார். அவன் கள்வர்களின் கைகளில் சிக்கினான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். ஆனால், அந்த கதை அங்கே முடிவடையவில்லை. ஒரு நல்ல சமாரியன் அவனைக் கண்டபோது, அவன்மேல் மனதுருகினான். அவனிடம் சென்று, அவனுடைய காயங்களைக் கட்டி, எண்ணெயும், திராட்ச ரசமும் ஊற்றி, அவனைப் பராமரித்து, அவனுடைய நலனுக்காகத் தேவையான அனைத்தையும் செய்தான்.

அதேபோல, ஆவிக்குரிய ரீதியில் காயப்பட்டவர்கள், உடைந்த உள்ளமுடையவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், நம்பிக்கையின்றி கைவிடப்பட்டவர்கள் ஆகியோரைச் சென்றடைந்து அவர்களுக்கு ஊழியம் செய்யும் பொறுப்பை கர்த்தர் நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். இந்த அழைப்பு மிகுந்த பாரம் நிறைந்ததும், மகத்தான பொறுப்புகளும் உள்ளடக்கியவை.

## பாரமும், போராட்டமும்!

இப்படியாக, எங்கள் தோள்களின்மேல் தேவன் சுமத்தியுள்ள சுமையின் அளவையும், நிர்வாகப் பொறுப்புகளையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தேவன் எங்களிடம் ஒப்படைத்துள்ள அனைத்து பொறுப்புகளையும், தேவைகளையும் நீங்களும் நன்கு உணர வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆயினும், ஒவ்வொரு காலகட்டத்திலும் நம் தேவனாகிய கர்த்தர் எம்மைத் தாங்கி, பலப்படுத்தி, நாங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு கடினமான சூழ்நிலைகளின் வழியாக எங்களோடு கூடவே நடந்து வருகிறார்.

சுவிசேஷம் எதிர்க்கப்படும் இடங்களில் நாங்கள் ஊழியம் செய்யும்போது, பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறோம். நோய், பொருளாதார நெருக்கடிகள், ஏமாற்றங்கள், பாதுகாப்பற்ற நிலை மற்றும் சத்தியத்தை எதிர்க்கும் மக்களால் ஏற்படும் பல்வேறு சிரமங்களை நாங்கள் சந்திக்கிறோம். சில நேரங்களில், இந்த பயணம் நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மிகவும் கடினமாகத் தோன்றினாலும், இத்தகைய எல்லாச் சூழ்நிலைகளுக்கும் மேலாக, நாம் நம்முடைய விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து, ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை வழிநடத்தவும், பலப்படுத்தவும், பாதுகாக்கவும், நடத்திச் செல்லவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருக்கிறார் என்று அறிக்கையிடுகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும், தேவன் நமக்குக் கொடுத்த சாட்சியின் வார்த்தைகளாலும் நாம் சத்துருவின்மேல் வெற்றிபெறுவோம்.

**மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.** – வெளிப்படுத்தின விசேஷம் 12:11.

ஊழியத்தில் நாங்கள் பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடலாம்; ஆனால், எங்களுடைய நம்பிக்கை கர்த்தரிலேயே நிலைத்திருக்கிறது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்; எனவே, அவருடைய நோக்கங்களின்படி நம்மை முன்னோக்கி வழிநடத்துவார் என்று நாங்கள் முழுமையாக அவரை நம்புகிறோம்.

## இந்த ஊழியத்தில் உங்கள் பங்களிப்பு எங்களுக்குத் தேவை!

இறுதியாக, தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ள தரிசனத்தை அடுத்த நிலைக்கு (கட்டங்களுக்கு) எடுத்துச் செல்ல நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்தப் பணியில் உங்கள் கூட்டுப் பங்களிப்பும் எங்களுக்கு மிகவும் அவசியமாகிறது.

உண்மையாகவே, தோல்விகள், ஆபத்துகள், பொருளாதாரத் தேவைகள், நிச்சயமற்ற சூழ்நிலைகள் மற்றும் இன்னும் பல சவால்களை நாம் எதிர்கொள்கிறோம். ஆகையால், தேவனுடைய ராஜ்யத்திற்கான இந்த மகத்தான பணியில் எங்களோடு இணைந்து, எங்களுக்காக ஜெபித்து, ஆதரவாக நிற்கும் தேவனுடைய ஜனங்கள் எங்களுக்குத் தேவை.

கர்த்தர் உங்களை வழிநடத்துகிறபடி, எங்களுக்காக ஜெபித்து, உங்கள் உதவிக்கரத்தை நீட்டுவீர்களா ?

உங்கள் ஜெபங்கள், ஊக்கமளிக்கும் வார்த்தைகள், ஐக்கியம் மற்றும் நடைமுறை உதவிகள் அனைத்தும் எங்களுக்கு மிகவும் மதிப்புமிக்கவை. இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியைக் கேட்க வேண்டிய மக்களிடம் அந்த நற்செய்தியைத் தொடர்ந்து எடுத்துச் செல்ல நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

தேவன் உங்களை மிகுதியாக ஆசீர்வதிப்பாராக!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான,**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

**தேவன்: வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.** ஆதியாகமம் 1:3.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் செய்கிற கிரியைக்கு இது எவ்வளவு வல்லமையான ஓர் உருவகமாக இருக்கிறது!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குழப்பம், கலக்கம், பாவம், ஆக்கினை ஆகியவற்றால் சூழப்பட்ட உலகிற்குள் வந்தார். அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் மனித குலத்திற்கு புதிய ஜீவன், நம்பிக்கை, மீட்பு மற்றும் இரட்சிப்பை கொண்டு வந்தன.

இருள் மேலோங்கியிருந்த இடத்தில், தேவன் தமது வார்த்தையினால் ஒளியை உண்டாக்கினார். அதேபோல,

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஒளியை நம்முடைய வாழ்க்கைக்குள் பிரகாசிக்க செய்யும்போது, இருள், என்ற வார்த்தைக்கே இடம் இல்லை!

நம்முடைய குடும்பங்களுக்கு நம்பிக்கை உண்டு.

நம்முடைய பிள்ளைகளுக்கு நம்பிக்கை உண்டு.

நம்முடைய திருமணங்களுக்கு நம்பிக்கை உண்டு.

நம்முடைய ஊழியங்களுக்கு நம்பிக்கை உண்டு.

நம்முடைய எதிர்காலத்திற்கு நம்பிக்கை உண்டு.

சூழ்நிலைகள் எவ்வளவு இருளாகத் தோன்றினாலும், தேவனுடைய ஒரு வார்த்தை எல்லாவற்றையும் மாற்றிவிடும்!

## தேவன் ஒளியாயிருக்கிறார் - நாம் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்!

யோவான் 1:1–5 நம்மை மீண்டும் ஆதிக்கு அழைத்துச் சென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய அடையாளத்தை வெளிப்படுத்துகிறது:

**அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.** - யோவான் 1:4–5.

**தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை.** .... என்று 1 யோவான் 1:5–ல் அப்போஸ்தலனாகிய யோவான் அறிவிக்கிறார்.

ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக இருப்பதில் ஒரு அற்புதமான காரியம் இருக்கிறது.

**நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.** ... என்று மத்தேயு 5:14–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே இதனை அறிவிக்கின்றார்.

ஒரு கணம் நின்று இதைச் சிந்தித்துப் பாருங்கள்.

**தேவன் ஒளியாயிருக்கிறார்.**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தின் ஒளியாயிருக்கிறார்.

அவருடைய ஒளியை இந்த உலகத்தில் பிரகாசிக்கச் செய்ய அவர் நம்மை அழைத்திருக்கிறார்!

எத்தனை மகத்தான சிலாக்கியம்!

நாம் ஒளியின் மூலம் (ஊற்று) அல்ல; அவருடைய ஒளியை பிரதிபலிக்க அழைக்கப்பட்டவர்கள். ஒளி நம்மிடமிருந்து தோன்றுவதில்லை. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து வருகிறது; அவருக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களின் வாழ்க்கையின் மூலம் பிரகாசிக்கிறது.

தேவன் சாதாரணமான மக்களைத் தமது அசாதாரணமான ஒளி வெளிப்படும் பாத்திரங்களாக பயன்படுத்தத் தெரிந்து கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குள்ளும் நம் மூலமாகவும் கிரியை செய்ய நாம் ஒப்புக் கொடுக்கும் போது, நம்முடைய வார்த்தைகள், செயல்கள், குணநலன் மற்றும் வாழ்க்கை முறையின் வழியாக அவருடைய சாயலை மற்றவர்கள் காண முடியும்.

அப்படியானால், இந்த இருளான உலகத்தில் தமது ஒளியின் பிரதிநிதிகளாகிய நம்மிடமிருந்து தேவன் எதை எதிர்பார்க்கிறார்?

### 1. ஒளி இருளுக்குள் பிரகாசிக்கிறது!

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது: இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.** யோவான் 1:5.

ஒளியின் முதலாவது மற்றும் மிகத் தெளிவான தன்மை என்ன? ஒளி பிரகாசிக்கும்!

ஒளி எங்கே மிகவும் தெளிவாகத் தெரியும்? இருளில்தான்!

எல்லாமே ஏற்கனவே பிரகாசமாகவும், தெளிவாகவும் இருக்கும் இடங்களுக்கு தேவன் நம்மை அழைப்பதில்லை. அவருடைய ஒளி நம் மூலம் வெளிப்படும்படியாக, இருள் இருக்கும் இடங்களுக்கே அவர் நம்மை அனுப்புகிறார்.

சில நேரங்களில், அனைவருடைய கவனத்தையும் ஈர்க்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். வசதியான சூழ்நிலைகள், சாதகமான நிலைமைகள், சமாதானமான உறவுகள், சிரமமில்லாத காலங்கள் ஆகியவற்றை நாம் விரும்புகிறோம்.

ஆனால், மிகவும் கடினமாகத் தோன்றும் அந்த இடமே, தேவன் நம்மை மிகவும் வல்லமையாகப் பயன்படுத்த விரும்பும் இடமாக இருக்கலாம்.

ஒருவேளை தேவன் உங்களை ஒரு கடினமாக வேலை செய்யும் இடத்தில் வைத்திருக்கலாம்.

ஒருவேளை உங்கள் குடும்பத்தில் சவால்களை எதிர்கொள்ள வைத்திருக்கலாம்.

ஒருவேளை உங்கள் ஊழியத்தில் கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கலாம்.

ஒருவேளை உங்கள் எதிர்காலத்தைக் குறித்து நிச்சயமற்ற நிலையில் இருக்கலாம்.

இருளின் இடத்தை அற்பமாக எண்ணாதீர்கள்.

உங்கள் ஒளி மிகவும் பிரகாசமாக ஒளிர வேண்டுமென்று தேவன் விரும்பும் இடமாக அது இருக்கலாம்!

**... நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்** என்று மீகா 7:8–ல் வாசிக்கிறோம்.

நாம் இருளில் உட்கார வேண்டிய காலங்கள் இருக்கலாம். ஆனால், அங்கேயும் தேவன் நம்முடைய ஒளியாக இருக்கிறார்!

**தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்** என்று சங்கீதம் 18:28–ல் பிரகடனப்படுத்துகிறது.

**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; ...** என்று சங்கீதம் 23:4 நமக்கு நினைவூட்டுகிறது.

என் அன்பான சகோதரனே, சகோதரியே, இன்று நீங்கள் இருளால் சூழப்பட்டிருப்பதாக உணர்ந்தால், மனந்தளராதீர்கள்! தேவன் உங்களோடு இருக்கிறார்!

நீங்கள் பள்ளத்தாக்கின் வழியாக நடந்து செல்லலாம்; ஆனால், தனியாக நடக்கவில்லை.

மேலும் இதை நினைவில் கொள்ளுங்கள்: நாமே இருளாக மாறுவதன் மூலம் இருளை மேற்கொள்வதில்லை.

ஒரு இருண்ட அறையில் விளக்கு ஏற்றப்படும்போது, ஏதாவது ஒரு செயலின் மூலம் இருளை வெளியேற்ற வேண்டியதில்லை. ஒளியின் பிரசன்னத்தில் இருள் தானாகவே மறைந்து விடுகிறது.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்**. மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL. EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



**GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS**

பகிர்தல் (Share) (கலாத்தியர் 6:2), உதவி செய்தல் (Support) (ரோமர் 12:13) மற்றும்
துரிதப்படுத்துதல் (Speed up) (I தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 அக்டோபர் 19 முதல் 2026 நவம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

அக்டோபர் 19 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** வெற்றிகரமான 58–வது வருட பிரவேசத்திற்காக…

அக்டோபர் 20 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** ஆண்டு விழாவின் விசேஷித்த கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதற்காக…

அக்டோபர் 21 ⇨ இதர ஊழியங்களை தாங்கச் செய்த கிருபைக்காக…

அக்டோபர் 22 ⇨ வேதாகம கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக…

அக்டோபர் 23 ⇨ **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஊழியத்தினை** 1969 முதல் இன்றுவரை அர்ப்பணிப்போடு நிறைவேற்றி வருவதற்காக …

அக்டோபர் 24 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக…

அக்டோபர் 25 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் விண்ணப்பப்பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக …

அக்டோபர் 26 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய செய்ததற்காக…

அக்டோபர் 27 ⇨ **இயேசுவின் குடும்பம் – ஓர் இனிய அன்பின் கூடுகை** என்ற சிறப்பு குடும்பக்கூடுகை தலைமைச்சபையில் தேவனின் பிரசன்னத்துடன் இனிதே நடைபெற்றமைக்காக…

அக்டோபர் 28 ⇨ மகாபலிபுரத்தில் ஆகஸ்ட் 15–ல் நடைபெற்ற சிறப்பு ஆண்கள் கூடுகையை கர்த்தர் ஆசீர்வதித்த கிருபைக்காக …

அக்டோபர் 29 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக …

அக்டோபர் 30 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் பெண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக …

அக்டோபர் 31 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக….

நவம்பர் 01 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக…

நவம்பர் 02 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரையும் ஆசீர்வதித்து வருவதற்காக…

நவம்பர் 03 ⇨ உலக தேசங்களை கிருபையுடன் பாதுகாத்து வருகிறதற்காக…

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 ⇨ போதைப்பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டி …

நவம்பர் 05 ⇨ அர்ப்பணிப்புள்ள பணியாளர்களை நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்கு** வழங்க வேண்டி…

நவம்பர் 06 ⇨ நமது முழுநேர மற்றும் மாலை நேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** மாணவர்கள் நல்லொழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் விளங்க வேண்டி…

நவம்பர் 07 ⇨ இயற்கை சீற்றங்களிலிருந்து தேவபாதுகாப்பு வேண்டி…

நவம்பர் 08 ⇨ உலக தேசங்களின் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்காக…

நவம்பர் 09 ⇨ உலகளாவிய மக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக வேண்டி …

நவம்பர் 10 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல உதவ வேண்டி…

நவம்பர் 11 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நல்ல ஆரோக்கியத்திற்காக …

நவம்பர் 12 ⇨ உலகில் நடைபெற்றுவரும் குழந்தைக் கடத்தலை அகற்ற வேண்டி…

நவம்பர் 13 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் மற்றும் சபைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் …

நவம்பர் 14 ⇨ அனைத்து கிறிஸ்தவ ஊழியங்களிலும் கர்த்தரின் வல்லமையான அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் அடையாளங்கள் நடக்க வேண்டி…

நவம்பர் 15 ⇨ அனைத்து மக்களின் மனக்கண்களை கிறிஸ்துவுக்குள் ஒளிரச் செய்ய…

நவம்பர் 16 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** மாணவர்களுக்கு படிப்பு, ஞானம், புரிந்து கொள்ளும் ஆற்றலை வழங்கி, வாழ்வின் அனைத்து துறைகளிலும் வழிநடத்த வேண்டி…

நவம்பர் 17 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க…

நவம்பர் 18 ⇨ இந்த மாதத்தின் **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க…

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

இருள் ஒளிக்கு இடங்கொடுக்க வேண்டும்!

ஆகவே, தொடர்ந்து பிரகாசியுங்கள்!

## 2. இருளால் ஒளியை மேற்கொள்ள முடியாது!

இருள் வல்லமையானதாகத் தோன்றலாம். அது பயமுறுத்துவதாகத் தோன்றலாம். அது எதிர்காலத்தை நிச்சயமற்றதாகக் காண்பித்து, நம்முடைய உள்ளத்தில் பயத்தை எழுப்பலாம்.

ஆனால், இருளுக்கு ஒரு வரம்பு உண்டு; அதனால் ஒளியை மேற்கொள்ள முடியாது!

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை** என்று யோவான் 1:5 அறிவிக்கிறது.

ஒரு அறை எவ்வளவு இருளாக இருந்தாலும், ஒளி உள்ளே வந்த அந்தக் கணமே இருள் தன் ஆதிக்கத்தை இழக்கிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை உலகத்தின் ஒளியாக இருக்க அழைத்திருக்கிறார். ஆனால், சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கையில் சூழ்நிலைகள் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தின் மீதும் ஒரு நிழலைப் போடுவது போலத் தோன்றலாம்.

அது ஒரு மருத்துவ அறிக்கையாக இருக்கலாம்.

அது ஒரு அரசாங்கத் தீர்மானமாக இருக்கலாம்.

அது ஒரு கடினமான குடும்பச் சூழ்நிலையாக இருக்கலாம்.

அது பண நெருக்கடியாக இருக்கலாம்.

அது நிராகரிப்பாக இருக்கலாம்.

அது தனிமையாக இருக்கலாம்.

அது எதிர்காலத்தைக் குறித்த குழப்பம், நிச்சயமின்மை அல்லது பயமாக இருக்கலாம்.

ஆனால், இதைத் தெளிவாகக் கேளுங்கள்; இருள் என்பது இறுதி வார்த்தை இல்லை!

நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது, நம்முடைய ஒளியின் மூலாதாரத்தோடு (ஊற்றோடு) இணைந்திருக்கிறோம்.

ஒரு விளக்கு அதன் மின்சார மூலத்திலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டால், அது தொடர்ந்து பிரகாசிக்க முடியாது.

அதேபோல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்வோடுள்ள நம்முடைய உறவு குளிர்ச்சியடையவோ, தூரமாகவோ நாம் அனுமதித்தால், திறம்பட பிரகாசிக்க முடியாது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள தொடர்பு முக்கியமானது. அதுவே நமது பெலன்.

நம்முடைய ஜெப வாழ்க்கை முக்கியமானது.

தேவனுடைய வார்த்தையோடு நமக்குள்ள உறவு முக்கியமானது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள ஐக்கியம் முக்கியமானது

பரிசுத்த ஆவியானவர்மீது நாம் சார்ந்திருப்பது முக்கியமானது.

நம்மை ஒளியின் மூலாதாரத்திலிருந்து துண்டிக்க வேண்டும் என்பதே எதிரியின் விருப்பம். ஏனெனில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு விசுவாசி ஆவிக்குரிய விதத்தில் திறம்பட பிரகாசிக்கப் போராடுவான் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

ஆனால், நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது, அவருடைய ஒளி நம் மூலம் தொடர்ந்து பிரகாசிக்கும்.

ஆகவே, விசுவாசத்தோடு நாம் அறிக்கை செய்வோம்.

என் சிந்தனைகள்மேல் இருளுக்கு அதிகாரமில்லை!

என் எதிர்காலத்தின்மேல் இருளுக்கு அதிகாரமில்லை!

என் குடும்பத்தின்மேல் இருளுக்கு அதிகாரமில்லை!

என் அழைப்பின்மேல் இருளுக்கு அதிகாரமில்லை!

என் ஊழியத்தின்மேல் இருளுக்கு அதிகாரமில்லை!

எனக்குள் இருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் பிரகாசிக்கச் செய்யும் ஒளியாயிருக்கிறார்! ஆமென்!

## 3. இந்த காலத்தில் நாம் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்!

**நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.** ... என்று மத்தேயு 5:14 ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரகடனப் படுத்துகிறார்.

"எல்லாம் நன்றாக நடந்து, உங்கள் சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறவில்லை.

சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது மட்டுமே நாம் பிரகாசிக்க அழைக்கப்படவில்லை.

எல்லா காலத்திலும் நாம் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்!

பரிபூரணமான காலம் ஒருபோதும் இல்லாமல் இருக்கலாம். பரிபூரணமான சூழ்நிலைகள் ஒருபோதும் இல்லாமல் இருக்கலாம். சாதகமான சூழலும் ஒருபோதும் இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், இருள் மறையும்வரை காத்திருந்து பின்னர் பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் நம்மை அழைக்கவில்லை. இருளின் நடுவிலேயே நாம் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்!

**... மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே.** என்று யோவான் 3:19 நமக்கு நினைவூட்டுகிறது. ஆகவே, ஒளியில் நடக்க வேண்டும் என்ற நமது தீர்மானம், நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்து சில நேரங்களில் நம்மை வேறுபட்டவர்களாக காண்பிக்கும்.

அது எப்போதும் பிரபலமானதாக இருக்காது.

அது எப்போதும் புரிந்து கொள்ளப்படாது.

சில நேரங்களில் அது நமக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தலாம்.

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology &
Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org / இணையதளம் : www.echoofhiscall.org
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.

ஆனால், நம்மைச் சுற்றியுள்ள இருளுக்கு ஒத்துப்போகும்படி நாம் ஒருபோதும் அழைக்கப்படவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒளியைச் சுமந்து செல்ல நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்!

நம்முடைய அழைப்பு இருளோடு கலந்து போவதல்ல; இருளில் பிரகாசிப்பதே!

### 4. தேவன் ஒளியை இருளிலிருந்து பிரித்தார் - பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை!

**தேவன்: வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்** என்று ஆதியாகமம் 1:3–4 கூறுகிறது.

இங்கு தேவன் செய்த செயல்களின் வரிசையைச் சற்று கவனியுங்கள்:

தேவன் இருளுக்குள் ஒளியை வார்த்தையினால் சிருஷ்டித்தார். பின்னர், ஒளியை இருளிலிருந்து பிரித்தார்.

ஒவ்வொரு விசுவாசிக்கும் இது ஆழமான செய்தியைத் தருகிறது.

தேவன் நம்மை பிரகாசிக்க மட்டுமல்ல, தமக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவும் அழைத்திருக்கிறார்.

நாம் நன்கு தெரிந்தே இருளைத் தழுவிக்கொண்டிருக்கும்போது, ஒளியைத் திறம்பட பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.

வேறுபாடு இருக்க வேண்டும்.

பரிசுத்தம் இருக்க வேண்டும்.

நமது வாழ்க்கை, பேச்சு, சிந்தை, செயல், பிறரை நடத்தும் விதம், தீர்மானங்கள் மற்றும் நம்முடைய நடத்தை ஆகிய எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குரிய ஒரு தெளிவான வேறுபாடு வெளிப்பட வேண்டும்.

நாம் பிரதிநிதித்துவப்படுத்துகிறவரை நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும். ஏசாயா 42:6–7, **தேவனுடைய மக்கள் ஜாதிகளுக்கு ஒளியாக** அழைக்கப்பட்டிருப்பதைப் பேசுகிறது.

நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒளி நம்முடைய வாழ்க்கையின் எல்லைக்குள் மட்டுமே இருக்க வேண்டியதல்ல.

நம்முடைய வீடுகள் அந்த ஒளியை அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய பணியிடங்கள் அந்த ஒளியை அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய சபைகள் அந்த ஒளியை அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய சமுதாயங்கள் அந்த ஒளியை அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய தலைமுறை அந்த ஒளியை அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய விளக்குகளை ஏற்றி அவற்றை மறைத்து வைக்கும்படி தேவன் நம்மை அழைக்கவில்லை. பிரகாசிக்கும்படி அவர் நம்மை அழைத்திருக்கிறார்!

### 5. ஒளியின் ஆயுதத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்!

இறுதியாக, ரோமர் 13:12 நமக்கு வல்லமையான ஒரு சவாலை முன் வைக்கிறது.

**இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்.**

வேதம் பயன்படுத்தும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

"அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிடுங்கள்"

"ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளுங்கள்."

ஒளி என்பது நாம் பார்ப்பது மட்டுமல்ல;

அதைத் தரித்துக் கொண்டு அதன்படி வாழவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வது என்பது உலகத்தோடு ஒத்துபோகுதலுக்குப் பதிலாக நீதியைத் தேர்ந்தெடுப்பதாகும்.

அதாவது:

பாவத்திற்குப் பதிலாக பரிசுத்தத்தைத் தேர்ந்தெடுப்பது.

வஞ்சத்திற்குப் பதிலாக சத்தியத்தைத் தேர்ந்தெடுப்பது.

கசப்பிற்கு பதிலாக மன்னிப்பைத் தேர்ந்தெடுப்பது.

பயத்திற்குப் பதிலாக விசுவாசத்தைத் தேர்ந்தெடுப்பது.

சுயவசதிக்குப் பதிலாக கீழ்ப்படிதலைத் தேர்ந்தெடுப்பது.

இந்த உலகத்தின் முறைகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் பதிலாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தேர்ந்தெடுப்பது.

நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளும்போது, இருளின் கிரியைகளுக்கு எதிராக உறுதியாக நிற்க ஆயத்தப்படுத்தப்படுகிறோம்.

### உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும்!

அன்புக்குரியவர்களே!

நீதிமானுடைய வாழ்க்கையைக் குறித்து வேதம் ஒரு அழகான வாக்குத்தத்தத்தை வழங்குகின்றது:

**நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும்;** ... நீதிமொழிகள் 13:9.

நாம் ஒளியில் நடந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீதி நம்முடைய வாழ்க்கையை உருவாக்க அனுமதிக்கும்போது, மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் அவருடைய ஒளி நம் மூலம் பிரகாசிக்க முடியும்.

உங்கள் ஒளி முக்கியமானது.

உங்கள் சாட்சி முக்கியமானது.

உங்கள் ஜெபங்கள் முக்கியமானவை.

உங்கள் கீழ்ப்படிதல் முக்கியமானது.

உங்கள் உண்மைத்தன்மை முக்கியமானது.

உங்கள் குடும்பத்திற்கு உங்கள் ஒளி தேவை.

உங்கள் பணியிடத்திற்கு உங்கள் ஒளி தேவை.

உங்கள் சமுதாயத்திற்கு உங்கள் ஒளி தேவை.

உங்கள் சபைக்கு உங்கள் ஒளி தேவை.

சிலர் ஒருபோதும் சபைக் கட்டிடத்தின் வாசலைத் தாண்டி வராமல் இருக்கலாம்; ஆனால், உங்கள் வாழ்க்கையில் பிரகாசிக்கும் கிறிஸ்துவின் ஒளியின் மூலம் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ளக் கூடும்.

ஆகவே, உங்கள் ஒளியை மறைக்காதீர்கள்.

உங்கள் விசுவாசத்திற்காக வெட்கப்படாதீர்கள்.

கடினமான சூழ்நிலைகள் உங்கள் சாட்சியை மௌனமாக்க அனுமதிக்காதீர்கள்.

உங்கள் ஒளி முக்கியமற்றது என்று இருள் உங்களை நம்பச் செய்ய அனுமதிக்காதீர்கள்.

தொடர்ந்து பிரகாசியுங்கள்!

இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் ஒளிகளின் திருவிழாவை நாம் நினைத்துப் பார்க்கும்போது, அதைவிட மகத்தான ஒரு ஒளியை நினைவுகூருவோம்.

தற்காலிகமான ஒளி அல்ல.

அணைக்கப்படக்கூடிய ஒளி அல்ல.

மனிதக் கைகளால் உண்டாக்கப்பட்ட ஒளி அல்ல.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தின் ஒளி!

அவர் நம்முடைய இருளுக்குள் வந்தார்.

அவர் நம்முடைய கண்களைத் திறந்தார்.

அவர் இரட்சிப்பைக் கொடுத்தார்.

அவர் பாவத்தையும், மரணத்தையும் வென்றார்.

*இப்போது அவர் நம்மை அழைக்கிறார்:*

**நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.** ... மத்தேயு 5:14.

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....



ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## தம்முடைய ஊழியர்களைக் கைவிடாத மகத்துவ தேவன்!

**... தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக ... – சங்கீதம் 35:27.**

தேவஊழியம் செய்த காரணத்தால் கட்டிட உரிமையாளர்கள் நான் தங்கியிருந்த வீட்டையும், ஊழிய அலுவலகத்தையும் அடிக்கடி மாற்ற வலியுறுத்துவது வழக்கமான ஒரு காரியமாக இருந்தது.

வழக்கம்போல் 1978–ம் ஆண்டு சென்னையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கு குடியேறுவதற்கு முன்னால் அங்கு வந்து அந்த வீட்டை ஜெபித்து ஆசீர்வதிக்க என் சபையின் காலஞ்சென்ற **கனம் பொருந்திய தலைமைப்போதகர் ஜி. சுந்தரம்** (அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, சென்னை) அவர்களை வேண்டிக் கொண்டேன். அவர்கள் தனது உடன் போதகராக இருந்த காலஞ்சென்ற பாசமிகு **கனம்பொருந்திய போதகர் எம்.கே. சாம் சுந்தரம்** அவர்களை (அப்போஸ்தல கிறிஸ்தவ சபை) அனுப்பி வைத்தார்கள்.

அன்று நானும் **போதகர் எம்.கே. சாம் சுந்தரம்** அவர்களும் ஒரு வாடகைக் காரை (டாக்ஸி) ஏற்பாடு செய்து இருவருமாகப் பிரயாணம் செய்தோம். என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தது. அந்த வாகனம் புறப்பட்ட நேரத்திலிருந்தே போதகர் அவர்கள் தன் கண்களை மூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், நான் என்னிடம் இருந்த பணத்தை மனதிற்கொண்டு அந்த வாடகை வாகனத்தின் வாடகைப்பணம் இவ்வளவு என்று காண்பிக்கும் மீட்டரை மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

ஆனால், நேரம் போகப் போக, என்னிடம் இருந்த பணம் வாடகை வாகனத்தின் மீட்டர் காண்பித்த பணத்தை எட்ட ஆரம்பித்தது. திடீரென்று பார்த்தால், என்னிடம் இருந்த பணமும், மீட்டர் காண்பித்த பணமும் சரியான நிலைக்கு வந்து விட்டது. தொடர்ந்து அதிக தூரம் போகவும் வேண்டும். என்னிடம் மேற்கொண்டு பணமும் இல்லை. இருந்த பணத்திற்கு வாடகை வண்டி ஓடிவிட்டது. மேற்கொண்டு வாகனம் ஓடவோ அல்லது மீட்டர் ஓடவோ செய்தால், நான் பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்வேன் என்ற பயம் என்னை வதைத்துக் கொண்டே இருந்தது. என்னிடம் வேறு பணமும் இல்லை. என்னுடன் இருப்பவர் ஒரு பெரிய போதகர். எனவே, நான் செய்வது அறியாமல் திகைத்து, ஆண்டவரை நோக்கி, என் அப்பா, நான் என்ன செய்வேன்? என்னிடம் வேறு பணம் இல்லையே என்று இருதயத்தில் அலறினேன். என் சரீரத்தில் வியர்வை கொட்டியது.

பின்னர், நான் அந்த வாகனத்தின் மீட்டரை உற்றுப் பார்த்தபோது, அந்த மீட்டர் அதன் பிறகு ஓடாமல் நின்று விட்டது. என்னிடம் எவ்வளவு பணம் இருந்ததோ, அவ்வளவுக்கு அந்த மீட்டர் ஓடிவிட்டு, பின்னர் அது ஓடாமல் நின்றுவிட்டது. என் கண்கள் கலங்கின.

நாங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்தைச் சென்று சேர்ந்தோம். இந்த விஷயங்கள் கொஞ்சம்கூட போதகருக்குத் தெரியாது. வாகனத்தில் இருந்து இறங்கிய உடனே நான் வாகன ஓட்டுநரின் கையைப் பிடித்து, சகோதரனே, நான் ஜீவனுள்ள தேவனுடைய ஊழியக்காரன். என்னிடம் பணம் இவ்வளவுதான் இருக்கிறது. உங்கள் வாகனத்தின் மீட்டரும் இடையில் ஓடாமல் நின்று விட்டது. உங்கள் மீட்டர் காட்டும் பணம் மட்டுமே என்னிடம் உள்ளது. தயவு செய்து எனக்கு ஒரு மணிநேர அவகாசம் தாருங்கள். நான் நீங்கள் கேட்கும் தொகையைக் கொடுத்து விடுகிறேன். "தயவு செய்து தேவ ஊழியர் கேட்க எதையும் சொல்லி விடாதீர்கள்" என்று கெஞ்சினேன். உடனடியாக, அந்த வாகன ஓட்டுநர், என்னைக் கட்டி அணைத்து, சகோதரனே, நானும் ஒரு தேவனுடைய பிள்ளை, உங்களுக்கு சகாயம் பண்ணும்படி தேவன் எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன் என்று கூறி நான் அவருக்குக் கொடுத்த பணத்தையும் என்னிடம் திரும்பக் கொடுத்து, இதை என் அன்பின் காணிக்கையாக ஏற்று இன்று நீங்கள் உங்கள் புதிய வீட்டில் செல்லும்போது பால் வாங்கி நீங்களும் உங்கள் போதகரும் அருந்துங்கள். நான் ஆராதிக்கிற தேவன் உங்களை ஒரு கோடீஸ்வரராக மாற்றி ஆசீர்வதிப்பாராக! என்று கூறிவிட்டு, தன் வாகனத்தை எடுத்துக் கொண்டுப் போய்விட்டார். அதற்குப் பின்னர் நான் அவரை ஒருநாளும் பார்க்கவேயில்லை.

நானும், போதகரும் புதிய வீட்டில் சென்று ஜெபித்து பால் வாங்கி காய்த்துக் குடித்து மகிழ்ந்தோம். அன்றைக்கு போதகர் பாடிய பாடல் இன்றும் என் நினைவில் நிற்கிறது. அதைப் பாடும்போது நான் சத்தமாக அழுதேன். அவர் பாடலை இடையில் நிறுத்திவிட்டு, "சகோதரன் சாம், என் இப்படி கதறிக் கதறி அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அப்போது நான் நடந்தவற்றைக் கூறினேன். அவர்களும், கண்ணீர் மல்க, "ஏன் கலங்கினீர்கள்? என்னிடம் சொல்லவேண்டியதுதானே! நான் பணம் கொடுத்திருப்பேன் என்று உங்களுக்குத் தெரியாதா? பரவாயில்லை. ஆண்டவர் உங்களோடு இருக்கிறார். நீங்கள் பயப்பட வேண்டாம். அவர் உங்களை ஒரு வல்லமையான கருவியாக மாற்றி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சாட்சியாகவும், ஊழியக்காரனாகவும் மாற்றுவார்." என்று ஆசீர்வதித்துச் சென்றார்கள். அப்போது நானும் போதகர் அவர்களும் மட்டுமே இருந்தோம்.

<u>அன்று பாடப்பட்ட பாடலின் சில வரிகள் பின்வருமாறு:–</u>

*1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசுவுக்கே*
*துதி சாற்றிடுவோம் என்றுமே!*
*சேற்றிலிருந்தெம்மை மீட்டெடுத்தென்றும்*
*ஆற்றியே தேற்றுவதால்*
*இன்ப இயேசுவின் திவ்விய நாமத்தை துன்பம் சூழும்*
*எவ்வேளையிலும் நன்றியோடு நாம் பாடிடுவோம்.*

*2. தண்ணீரை கடந்திடும் வேளையிலும்*
*அவர் நம்மோடு இருப்பேன் என்றார் (2)*
*அக்கினி சூளையில் நடத்திடும்*
*வேளையில் விக்கினம் சூழாதென்றார்.*

*3. கஷ்டங்கள் நஷ்டங்கள் சூழ்ந்திடும் வேளையில்*
*சோர்ந்திடா பெலன் அளிப்பார் (2)*
*நாளும் நம் குறைகள் யாவையும் அகற்றி,*
*நல்குவேன் கிருபை என்றார்.*

**அன்பு சகோதரனே, சகோதரியே, இந்த சம்பவத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் அனுபவம் என்ன? உங்களுக்கும் இந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து இதைவிட மேலானக் காரியங்களைச் செய்வார். அவரையே உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்!**

*****************

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆகவே, நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து, நம்மையே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்வோம்.

எந்த இருளுக்குள் நான் பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் என்னை அழைக்கிறார் ?

என் ஒளியின் மூலாதாரமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு நான் இன்னும் இணைந்திருக்கிறேனா ?

என் வாழ்க்கையில் ஒளியிலிருந்து பிரிக்கப்பட வேண்டிய ஏதாவது இருக்கிறதா ?

இந்தக் காலம் கடினமாக இருந்தாலும் நான் பிரகாசிக்கத் தயாராக இருக்கிறேனா ?

என் வாழ்க்கையின் மூலம் மக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் காண்கிறார்களா ?

***இன்று ஒரு தீர்மானம் எடுப்போம்!***

நான் பிரகாசிப்பேன் !

நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருப்பேன் !

நான் ஒளியில் நடப்பேன் !

இருளின் கிரியைகளைத் தள்ளி விடுவேன் !

ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வேன் !

என் குடும்பத்திலும், என் சபையிலும், என் பணியிடத்திலும், என் சமுதாயத்திலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒளியை நான் சுமந்து செல்வேன்.

ஏனெனில், இருளால் ஒளியை மேற்கொள்ள முடியாது !

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குள் வாழ்கிறபோது நாம் பிரகாசிக்க அழைக்கப்பட்டவர்கள் !

**எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது; கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.** ஏசாயா 60:1

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒளி நம் ஒவ்வொருவரின் மூலமாகவும் பிரகாசமாகப் பிரகாசித்து, நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையையும், உடைந்த உள்ளங்களுக்கு சுகத்தையும், வழிதவறியவர்களுக்கு வழிகாட்டுதலையும், அவருடைய நாமத்திற்கு மகிமையையும் கொண்டு வருவதாக. ஆமென் !

*************

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.* – ஆசிரியர்

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.

"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும். – ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

ரூ.1000/– மட்டுமே.

ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே. – ஆசிரியர்

மேலும் விவரங்களுக்கு : **தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**

*10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.*

*தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766*

கைபேசி: (+91) 98410 71852, 95661 31858, மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## 57-வது ஆண்டுவிழா - சிறப்பு செய்தியாளர்கள்



நமது **அழைப்பின் எதிரொலி** ஆண்டு விழாவில் சகோதரி பத்மா முதலியார், சகோதரி ஜெபகுமாரி டேவிட் மற்றும் சகோதரி ஷீபா (பாடகி) ஆகியோர் சிறப்பு செய்தியாளர்களாகப் பங்கேற்றனர்.

நேரில் கலந்து கொண்டவர்கள் மற்றும் **அழைப்பின் எதிரொலி யூடியூபின்** மூலம் நிகழ்ச்சிகளை பார்த்தவர்களின் விசுவாசத்தை பலப்படுத்தவும், ஆவிக்குரிய வாழ்க்கையை கட்டி எழுப்பவும் நமது சிறப்பு செய்தியாளர்களை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!

## தேவை !



அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்படும் பணியாளர்கள் தேவை!

1. தலைவர்கள் மற்றும் பணியாளர்கள்
கம்ப்யூட்டர் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

2. வாகன ஓட்டுனர்
அனுபவம் மற்றும் பொறுப்பு உடையவர்கள் தேவை

3. பாதுகாவலர்கள் (Security Staff)
நம்பகத்தன்மையும், பொறுப்பும் உடையர்கள் தேவை

*விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் Bio-Dataவை அனுப்பலாம்*

**வாட்ஸ் அப்: +91 98412 71858**

**மின்னஞ்சல்:** sam@echoofhiscall.org

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th SEPTEMBER 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**